# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

අති විශෙෂ

அதி விசேஷமானது

අංක 2178/24 - 2020 ජූනි මස 03 වැනි බදාදා - 2020.06.03

*2178/24 ஆம் இலக்கம் - 2020 ஆம் ஆண்டு யூன் மாதம் 03 ஆந் திகதி புதன்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


## பகுதி I : தொகுதி (I) - பொது

### *அரசாங்க அறிவித்தல்கள்*

**இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் அரசியலமைப்பின் 104 ஆ. (5) (அ) உப உறுப்புரையின் கீழான ஊடக வழிகாட்டி நெறிகள்**

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் அரசியலமைப்பின் 104 ஆ. (5) (அ) உப உறுப்புரையின் கீழ் தேர்தல் ஆணைக்குழுவினால் ஆக்கப்படுகின்ற ஊடக வழிகாட்டி நெறிகள்.

மஹிந்த தேசப்பிரிய,
தவிசாளர்,
தேர்தல் ஆணைக்குழு.

என். ஜே. அபேசேக்கர,
உறுப்பினர்
தேர்தல் ஆணைக்குழு.

எஸ். இரத்னஜீவன் எச். ஹூல்,
உறுப்பினர்,
தேர்தல் ஆணைக்குழு.

கொழும்பு,
2020, யூன் 03.

01. ஒவ்வோர் ஊடக நிறுவனமும், அரசியற் கருமங்கள் தொடர்பான தமது செய்தி மடல்களையும் வேறேதேனும் நிகழ்ச்சியையும் ஒலிபரப்புவதில் அல்லது ஒளிபரப்புவதில் அல்லது பிரசித்தப்படுத்துவதில் செம்மையான, சமச்சீரான மற்றும் பக்கச்சார்பற்ற தகவல்களை வழங்குதல் வேண்டும். இது தொடர்பில் தேர்தல் ஆணைக்குழுவினால் விதித்துரைக்கப்பட்ட பின்வரும் ஊடக வழிகாட்டி நெறிகள் உரிய முறையில் அமுலாக்கம் செய்யப்படுகின்றனவா என்பதையும், ஊடகங்களின் பக்கச்சார்பின்மை பற்றி கிரமமாக கண்காணிப்புச் செய்வதற்காக ஊடாக வழிகாட்டி நெறிக்கமைய செயலாற்றுதல் குறித்த அவதானிப்புகளையும்


1A - PG 4996— 267 (2020/06)

*இவ் அதி விசேட வர்த்தமானியை www.documents.gov.lk என்னும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*

விதப்புரைகளையும் வழங்குகின்ற நிரந்தரப் பிரதிநிதிகள் குழுவொன்று தேர்தல் ஆணைக்குழுவினால் நியமிக்கப்படுகின்றது. இக்குழு, தேர்தல் ஆணைக்குழுவின் பணிப்புகளுக்கும் அறிவுறுத்தல்களுக்கும் அமைய செயலாற்றுதல் வேண்டுமென்பதுடன் தேர்தல் ஆணைக்குழு இக்குழுவின் விதப்புரைகளைப் பரிசீலித்து தேவையான முடிவுகளை எடுக்கும். இக்குழுவின் அமைப்பும் அங்கத்தவர்களும் ஆணைக்குழுவினால் தேர்தலுக்கான திகதி பிரகடனம் செய்யப்பட்டதன் பின்னர் அறிவிப்புச் செய்யப்படும்.

02. ஒவ்வோர் ஒளிபரப்பு, ஒலிபரப்பு மற்றும் அச்சு ஊடகமும், ஏதேனும் தேர்தல் தொடர்பான கருமங்களை அவை அறிக்கையிடுவதில் நடுநிலைமையுடையதாகவும் பக்கச்சார்பற்றதாகவும் இருத்தல் வேண்டுமென்பதுடன், போட்டியிடுகின்ற ஏதேனும் அரசியற் கட்சிக்கு, சுயேச்சைக் குழுவுக்கு அல்லது வேட்பாளரொருவருக்கு வானொலியில் அல்லது தொலைக்காட்சியில் வானலைக் காலத்தைக் குறித்தொதுக்குவதிலும் செய்தித்தாள்களில் இடங்களைக் குறித்தொதுக்குவதிலும் அத்தகைய அரசியற் கட்சிக்கு, சுயேச்சைக் குழுவுக்கு அல்லது வேட்பாளரொருவருக்கு அநீதி இழைக்கின்ற முறையிலும் அத்தகைய ஏதேனும் அரசியற் கட்சிக்கு, சுயேச்சைக் குழுவுக்கு அல்லது வேட்பாளரொருவருக்கு விசேட நன்மையை விளைவிக்கின்ற முறையிலும் செயற்படுதலாகாது.

03. செய்தித்தாள்களில் வெளியிடப்பட்ட பதிப்பாசிரியர் கருத்துக்கள் பற்றி இலத்திரனியல் ஊடகங்கள் வாயிலாக கருத்துத் தெரிவிக்கப்படுமிடத்து, அத்தகைய கருத்துரைகளிலான அபிப்பிராயங்கள் குழப்பநிலையைக் கொண்டனவாகவும் சமநிலைத்தன்மையற்றனவாகவும் இருக்கக்கூடுமாதலால், செய்தித்தாள்களில் வெளியிடப்பட்ட எவையேனும் பதிப்பாசிரியர் கருத்துக்கள் பற்றி கருத்துரைகள் வழங்கும் போது ஏதேனும் அரசியல் கட்சி/சுயேச்சைக் குழு அல்லது வேட்பாளரொருவர் ஊக்கப்படுத்தப்படுகின்ற விதத்தில் அல்லது பாதிப்பு ஏற்படக்கூடிய விதத்தில் கருத்துக்கள் தெரிவிக்கப்படுதலாகாது. பதிப்பாசிரியர் அபிப்பிராயமொன்று ஒலிபரப்பப்படும், ஒளிபரப்பப்படும் அல்லது வெளியிடப்படும் சந்தர்ப்பமொன்றில் அதன் மூலம் பாதிக்கப்பட்ட திறத்தவருக்கு, அத்தகைய அபிப்பிராயத்தை எதிர்ப்பதற்கான கருத்துக்களை ஒலிபரப்புவதற்கு, ஒளிபரப்புவதற்கு அல்லது வெளியிடுவதற்கு அதனையொத்த சந்தர்ப்பமளிக்கப்படுதல் வேண்டும்.

04. தொலைக்காட்சி அத்துடன் வானொலி அலைவரிசைகளில் நிகழ்ச்சிகளைத் தொகுத்தளிக்கின்றவர் அல்லது அறிவிப்பாளர் ஒவ்வொருவரும், ஒரு திறத்தவரை ஊக்குவிக்கின்ற அல்லது மற்றுமொரு திறத்தவருக்கு பாதிப்பேற்படுத்துகின்றவாரான செய்தித்தாள் தலைப்புச் செய்திகளையும் கேலிச்சித்திரங்களையும் தொகுத்தளிக்குமிடத்து தமது தனிப்பட்ட கருத்துக்களைத் தெரிவிப்பதை தவிர்த்தல் வேண்டும்.

05. ஏதேனும் நிகழ்ச்சி, குறைநிரப்பி அல்லது செய்தி, தேர்தல் சட்டங்களுடனும் தேர்தல் ஆணைக்குழுவின் ஊடக வழிகாட்டி நெறிகளுடனும் ஒவ்வாததாக இருப்பின், தேர்தல் காலப்பகுதியின்போது, அத்தகைய பக்கச் சார்பான நிகழ்ச்சியை அல்லது குறைநிரப்பியை ஒலிபரப்பாதிருத்தல் அல்லது ஒளிபரப்பாதிருத்தல் அல்லது வெளியிடாதிருத்தல், எல்லா இலத்திரனியல் மற்றும் அச்சு ஊடக நிறுவனங்களினதும் செய்தி மற்றும் நடப்பு செய்தி பிரிவுகளினதும் பொறுப்பாகும்.

06. தேர்தல் காலப்பகுதியினுள் ஒரு சம்பவத்தை அல்லது நிகழ்வை வெளிப்படுத்துகின்ற ஏதேனும் விடயம் வேட்பாளரொருவரின் கருத்துரைகளுடன் ஒலிபரப்பப்படுமிடத்து அல்லது ஒளிபரப்பப்படுமிடத்து அல்லது வெளியிடப்படுமிடத்து, அத்தகைய நிகழ்வில் ஆர்வம் அல்லது அக்கறை கொண்டுள்ள அல்லது அதனால் பாதிக்கப்படக்கூடிய சாத்தியங்கொண்ட வேறு ஏதேனும் அரசியற் கட்சிக்கு அல்லது சுயேச்சைக் குழுவுக்கும் அந்தச் சம்பவம் அல்லது நிகழ்வு தொடர்பில் கருத்துக்களைத் தெரிவிப்பதற்காக வாய்ப்பளிக்கப்படுதல் வேண்டும்.

07. தேர்தல் காலப்பகுதியின்போது ஒலிபரப்பப்பட்டதும் அல்லது ஒளிபரப்பப்பட்டதும் அத்தகைய தேர்தலுடன் நேரடியாகச் சம்பந்தப்பட்டதுமான ஏதேனும் விவரண நிகழ்ச்சியில் அல்லது விசேட நிகழ்ச்சியில் பிரதியாக்கம் செய்பவரின், அறிவிப்பாளரின் மற்றும் பதிப்பாசிரியரின் பெயர்கள் அந்நிகழ்ச்சி நடைபெறும்போது வெளியிடப்படுதல் வேண்டும். அத்தகைய ஏதேனும் ஊடக நிறுவனம் அத்தகைய விபரங்களை வெளியிடாதிருப்பதற்கான உரிமையைத் தொடர்ந்து வைத்திருக்கும் பட்சத்தில், அத்தகைய நிகழ்ச்சிக்குப் பொறுப்பாகவுள்ள ஆள் அதன் உள்ளீடுகளுக்குப் பொறுப்பானவராக்கப்படுதல் வேண்டும்.

08. தேர்தலொன்றில் போட்டியிடுகின்ற எவரேனும் வேட்பாளருக்கெதிரான உறுதிப்படுத்த முடியாத சார்த்துதல்களை நியாயமான முறையில் எண்பிக்க முடியாதிருப்பின், ஏதேனும் ஊடக நிறுவனம் அவற்றைச் செய்வதற்கு ஏதேனும் நிகழ்ச்சியின் போது அல்லது செய்தியின் போது வானலைக் காலத்தைப் பயன்படுத்துதலாகாது. ஏதேனுமோர் அரசியற் கட்சி, சுயேச்சைக்குழு அல்லது வேட்பாளரொருவர் ஏதேனும் அரசியற் கட்சிக்கு, சுயேச்சைக் குழுவுக்கு அல்லது வேட்பாளரொருவருக்கு எதிராக ஏதேனும் பொய்யான மற்றும் பங்கம் விளைவிக்கும் கூற்றைச் செய்துள்ளது அல்லது செய்துள்ளார் என உரிமை கோருவோராயின், அத்தகைய கூற்றுக்கெதிராக கருத்துத் தெரிவிப்பதற்கு அத்தகைய அரசியற் கட்சிக்கு, சுயேச்சைக் குழுவுக்கு அல்லது வேட்பாளருக்குச் சந்தர்ப்பமளிக்கப்படுதல் வேண்டும்.

09. ஏதேனும் அரசியற் கட்சியை, சுயேச்சைக் குழுவை அல்லது வேட்பாளரொருவரை ஊக்கப்படுத்தும் அல்லது நிலை குறைக்கும் சாத்தியங்கொண்ட ஏதேனும் குற்றச் செயலுடன் தொடர்புபட்ட ஏதேனும் அலுவலக முறையான வைபவத்தை அல்லது நிகழ்வை வெளிப்படுத்துகின்ற அல்லது குற்றச் செயல் ஒன்றோடு தொடர்புடைய ஏதேனும் செய்தி அல்லது நிகழ்ச்சி வெளியிடப்படுமிடத்து, அத்தகைய செய்தி அல்லது நிகழ்ச்சி ஏதேனும் தேர்தலுடன் தொடர்புபட்டதாக இராதிருப்பினுங்கூட ஒவ்வோர் ஊடக நிறுவனமும் அத்தகைய செய்தியை அல்லது நிகழ்ச்சியை வெளியிடுமாயின், தெளிவுபடுத்துகைக்காக அதில் சம்பந்தப்பட்டுள்ள ஏனைய திறத்தவர்களையும் கலந்தாலோசித்தல் வேண்டும்.

10. சனாதிபதியினால் அல்லது பிரதம அமைச்சரினால் அல்லது எவரேனும் அமைச்சரினால் தெரிவிக்கப்பட்ட அபிப்பிராயங்கள் அல்லது கருத்துக்கள் தேர்தலொன்றின் போது, வானொலி மூலம் அல்லது தொலைக்காட்சி மூலம் வெளிப்படுத்தப்படுமிடத்து, அத்தகைய ஆள் எந்த அரசியற் கட்சியைச் சேர்ந்தவராகவுள்ளாரோ அந்த அரசியற் கட்சிக்குக் கொடுக்கப்பட்ட வெளிப்படுத்துதலாகக் கொள்ளப்படுதல் வேண்டும். ஆதலால் அத்தகைய தேர்தலில் போட்டியிடுகின்ற ஏதேனும் எதிர் அரசியற் கட்சியின் எவரேனும் தலைவருக்கு ஒத்த நிகழ்ச்சிகளில் சந்தர்ப்பமளிக்கப்படுதலும் வேண்டும். விசேட கலந்துரையாடல்களை வெளியிடுவதிலும் பிரசாரக் கூட்டங்களை அறிக்கையிடுவதிலும் அச்சு ஊடகமும் எல்லா அரசியற் கட்சிகளுக்கும், சுயேச்சைக் குழுக்களுக்கும் வேட்பாளர்களுக்கும் இதே போன்று ஒத்த இடத்தையும் முக்கியத்துவத்தையும் வழங்குதல் வேண்டும்.

11. வேட்பாளரெவரையும் ஊக்கப்படுத்துகின்ற விதத்தில் அல்லது வேறு வேட்பாளரொருவருக்கு பாதிப்பேற்படுத்துகின்ற விதத்தில் வேட்பாளரெவருக்கும் விசேட மற்றும் சார்பான கவனிப்பை வழங்கி, வானொலியில் அல்லது தொலைக்காட்சியில், வானலைக் காலத்தை அல்லது அச்சு ஊடகத்திலான இடத்தைக் குறித்தொதுக்குதல் ஆகாது.

12. தேர்தலொன்றில் போட்டியிடுகின்ற வேட்பாளரெவரையும் ஊக்கப்படுத்துகின்ற விதத்தில் அல்லது வேறு வேட்பாளரொருவருக்கு பாதிப்பேற்படுத்துகின்ற விதத்தில் பகிரங்க அலுவலர்களுடனான விரிவுரை, நேர்காணல் அல்லது அத்தகைய வேறு நிகழ்ச்சி எதுவும் தேர்தல் காலப்பகுதியினுள் பிரசித்தப்படுத்தலோ அல்லது வெளியிடப்படுதலோ அல்லது ஒலிபரப்பப்படுதலோ அல்லது ஒளிபரப்பப்படுதலோ ஆகாது.

13. அரசியல் உரிமைகளை அனுபவிக்க உரித்துடையவர்களல்லாத பகிரங்க அலுவலர்களதும் முனைப்பான சேவையிலீடுபட்டுள்ள பாதுகாப்புப் படைகளதும் பொலிஸ் அலுவலர்களதும் இளைப்பாறிய பாதுகாப்புப் படை அதிகாரிகளதும் அல்லது பொலிஸ் அலுவலர்களதும் சேவையிலீடுபடுமிடத்து பெற்றுக் கொள்ளும் அல்லது சீருடை தரித்தவர்களாக பெற்றுக்கொள்ளும் புகைப்படங்களையோ கூற்றுக்களையோ கட்சிகளை அல்லது வேட்பாளர்களை ஊக்கப்படுத்துகின்ற விதத்தில் அல்லது பாதிப்பேற்படுத்துகின்ற விதத்தில் இலத்திரனியல், அச்சு அல்லது வேறு ஊடக அல்லது பிரசார ஊடகமொன்றினூடாக வெளிப்படுத்தல், ஒளிப்பரப்புதல் அல்லது ஒலிபரப்புதல் அல்லது பிரசித்தப்படுத்தல் ஆகாது.

14. ஒவ்வோர் இலத்திரனியல் ஊடக நிறுவனமும், குழுநிலைக் கலந்துரையாடல்களுக்கான அமைப்பு சமச்சீரானதாக இருக்கும் வகையில் கலந்துரையாடலுக்கான பங்குபற்றுநர்களைத் தெரிவுசெய்வதில் நியாயமான முறையில் செயலாற்றுதல் வேண்டும். ஒவ்வோர் ஊடக நிறுவனமும், எவரேனும் பங்குபற்றுநர் எக்குறிப்பிட்ட மொழியில் தேர்ச்சியற்றவராக உள்ளாரோ அக்குறிப்பிட்ட மொழியில் நிகழ்ச்சியை நடாத்துவதன்மூலம் அத்தகைய பங்குபற்றுநருக்கு அனுகூலமின்மையை விளைவிக்கின்ற விதத்தில் நிகழ்ச்சியை நெறிப்படுத்துவதனைத் தவிர்த்தல் வேண்டும். பங்குபற்றுநர்களுடனான நேர்காணல்களின் போதும் பங்குபற்றுநர் எந்த மொழியில் தேர்ச்சியுடையவராக உள்ளாரோ அந்த மொழியில் வெளியிடப்படுதல் வேண்டும். தெளிவற்ற, புரிந்துகொள்ள முடியாத கேள்விகளினூடாகப் பெறப்பட்ட தகவல்கள் வெளியிடப்படுதலாகாது என்பதுடன் அத்தகைய கேள்விகள் எப்போதேனும் கேட்கப்படல் ஆகாது. நிகழ்ச்சியின் ஆரம்பத்தில், ஒழுக்க முறையற்றனவாக உள்ள அல்லது மத நல்லிணக்கத்திற்கு அல்லது இன ஐக்கியத்துக்கு குந்தகம் விளைவிக்கின்றனவாக உள்ள கூற்றுக்களை நிகழ்ச்சியிலான பங்குபற்றுநர் அளிக்கக்கூடாதென அவர் எச்சரிக்கைப்படுத்தப்படுதல் வேண்டுமென்பதோடு, கலந்துரையாடல் நடைபெறுகையில் அத்தகைய கூற்றுக்கள் அளிக்கப்படின், நிகழ்ச்சியானது உடனடியாக நிறுத்திவிடப்படுதல் வேண்டும்.

15. தொலைபேசி மூலமான ஏதேனும் நிகழ்ச்சியில், ஒழுக்கமுறையற்றதல்லாத, மத நல்லிணக்கத்திற்கு அல்லது இன ஐக்கியத்திற்கு குந்தகம் விளைவிக்காத மற்றும் தேர்தல் தொடர்பான சட்டங்களுடன் ஒத்திருக்கின்ற கேள்விகளுக்கு அழைப்பவர் ஒவ்வொருவருக்கும் ஒத்த சந்தர்ப்பம் அளிக்கப்படுதல் வேண்டும். அத்தகைய தொலைபேசி மூலமான நிகழ்ச்சியை நடாத்துகின்ற ஆள் ஒவ்வொருவரும் சமச்சீரற்ற தொலைபேசி மூலமான நிகழ்ச்சிக்காக வகை சொல்ல வேண்டியவராதல் வேண்டும்.

16. ஏதேனும் இலத்திரனியல் அல்லது அச்சு ஊடக நிறுவனத்தின் எவரேனும் தவிசாளர், முகாமைச் சபை உறுப்பினர், பணிப்பாளர் அல்லது எவரேனும் ஊடகவியலாளர் அரசியற் செயற்பாடுகளில் முனைப்பாக ஈடுபடின், அத்துடன் அத்தகைய ஏதேனும் செய்தி, சமச்சீரான ஒலிபரப்பை அல்லது வெளியீட்டை வழங்குவதில் அக்கறை முரண்பாட்டை ஏற்படுத்தக்கூடியவிடத்து, அத்தகைய ஆள், பின்வருவனவற்றை நிறுவனத்தின் முகாமைத்துவத்துக்கு எழுத்தில் அறிவித்தல் வேண்டும் :-

(அ) அத்தகைய ஆள் அரசியல் செயற்பாடுகளில் சம்பந்தப்பட்டுள்ளமை ;

(ஆ) அத்தகைய ஆளினால் நிறுவனத்தில் வகிக்கப்படும் பதவி ; அத்துடன்

(இ) நிகழ்ச்சிகளை ஒழுங்குபடுத்துவதில் அல்லது நடாத்துவதில் அத்தகைய ஆள் சம்பந்தப்பட்டுள்ள அளவு.

17. ஏதேனும் அங்கீகரிக்கப்பட்ட அரசியற் கட்சியில் எவரேனுமாள் ஏதேனும் பதவியை வகிக்கின்றவிடத்தும், அல்லது ஒத்த தத்துவங்களைக் கொண்டிருக்கின்றவிடத்தும் அத்துடன் தவிசாளர், பணிப்பாளர், சபை உறுப்பினர், பிரதான நிறைவேற்றலுவலர் அல்லது பிரதான பதிப்பாசிரியர் போன்ற அதிகாரங்கொண்ட முக்கிய பதவியை எவரேனுமாள் வகிக்கின்றவிடத்தும் அத்துடன் அத்தகைய ஆள் தேர்தலொன்றில் வேட்பாளரொருவராக உள்ளவிடத்தும், அல்லது அத்தகைய ஆள் எந்தக் கட்சியைச் சேர்ந்தவராகவுள்ளாரோ அந்தக் கட்சி அத்தகைய தேர்தலில் போட்டியிடுகின்ற நேரடியான அங்கீகரிக்கப்பட்ட முன்னணியாக அல்லது அதன் கீழானதாக உள்ளவிடத்தும் அவர் அத்தகைய ஊடக நிறுவனத்தில் அவருக்குக் குறித்தளிக்கப்பட்ட கடமைகளில் முனைப்பான முறையில் ஈடுபடுதலாகாது. மேலும், அத்தகைய ஆள் தேர்தலொன்றில் போட்டியிடுகின்ற கட்சியொன்றில் வேட்பாளராக அல்லது அதில் முக்கிய பதவி வகிப்பவராகவிருப்பின், ஏதேனும் தொலைக்காட்சி அல்லது ஒலிபரப்பு நிறுவனத்தில் அரசியற்தன்மையினதான ஏதேனும் நிகழ்ச்சியை நடாத்துவதில் அவர் சம்பந்தப்பட்டிருத்தலாகாது என்பதுடன், அச்சு ஊடகத்தின் விடயத்தில் அத்தகைய ஆள் அந்த ஊடக நிறுவனத்தினூடாகத் தமது சொந்த அரசியல் வெளியீடுகளை வெளியிடுதலுமாகாது.

18. அரசியற் கட்சியொன்றின் எவரேனும் பங்குபற்றுநர், அத்தகைய பங்குபற்றாமைக்கான ஏதேனும் காரணத்தைக் குறித்தளிக்காமல் ஏதேனும் ஊடக நிறுவனத்தில் ஒரு கலந்துரையாடலில் அல்லது நேர்காணலில் பங்குபற்றுவதற்கு மறுக்குமிடத்து, அத்தகைய ஊடக நிறுவனம், அத்தகைய பங்குபற்றாமையை அழுத்திக் கூறுவதற்கு ஒரு வெற்றுக் கதிரையை வெளிக்காட்டி வைத்தலாகாது அல்லது வேறு ஒத்த நாடகப் பாணியிலான நிலைமையை உருவாக்குதலாகாது. பங்குபற்றுநரின் வராமை பற்றி எளிமையானதும் நேரடியானதுமான அறிவித்தலொன்றைச் செய்தல் உகந்ததாகும்.

19. அபிப்பிராய வாக்கெடுப்பு ஒன்றின் பெறுபேற்றை ஒலிபரப்புகின்ற ஏதேனும் இலத்திரனியல் ஊடகம் அல்லது அதனை வெளியிடுகின்ற ஏதேனும் அச்சு ஊடகம், அத்தகைய வாக்கெடுப்பை நடாத்திய ஒழுங்கமைப்பின் பெயரையும் அத்தகைய வாக்கெடுப்புக்கு நிதியளித்த ஒழுங்கமைப்பையும் அல்லது ஆளையும், ஈடுபடுத்தப்பட்ட முறைமையியலையும், மாதிரியின் அளவையும், பிழைகளின் விளிம்பையும் வெளிக்கள வேலைக்காலப் பகுதியையும், அறிவித்தல் அல்லது வெளியிடுதல் வேண்டும். மேலும், ஒலிபரப்புனர் அல்லது வெளியீட்டாளர், அத்தகைய வாக்கெடுப்பு, அத்தகைய வாக்கெடுப்பு நடைபெறும் நேரத்தில் மட்டுமே பொதுமக்களின் அபிப்பிராயத்தைப் பிரதிபலிக்கின்றதென்பதைக் குறிப்பிடுதல் வேண்டும்.

20. எவரேனும் வேட்பாளர் எக்கட்சியை அல்லது குழுவைச் சேர்ந்தவராக இராதுள்ளாரோ அக்கட்சியின் அல்லது குழுவின் மற்றுமொரு போட்டியிடுநரின் வேட்பாண்மையை மேம்படுத்துவதற்கான ஏதேனும் கூற்றை அத்தகைய வேட்பாளர் அளிக்குமிடத்து, அத்தகைய கூற்றை ஒலிபரப்புதல் அல்லது ஒளிபரப்புதல் என்ற வகையாக அத்தகைய கூற்றுக்குப் பிரசித்தமெதுவும் கொடுக்கப்படுதலாகாது.

21. தேர்தல் ஆணைக்குழுவின் எழுத்திலான சம்மதமின்றி, ஏதேனும் வாக்கெடுப்பு நிலையத்தின் அல்லது அஞ்சல் வாக்கெடுப்பு நிலையத்தின் உட்புறத்தில் நிழற்படங்களை எடுப்பதை அல்லது வீடியோ செய்வதை தவிர்த்தல் வேண்டும். சட்டவிரோதமாகப் பெறப்பட்ட ஏதேனும் நிழற்படம் அல்லது வீடியோப் படம் செய்தித்தாள்களில் வெளியிடப்படுதலோ, ஏதேனும் ஊடகத்தினூடாக ஒளிபரப்பப்படுதலோ, இலத்திரனியல், அச்சு அல்லது சமூக ஊடகங்கள் வாயிலாக பிரசித்தப்படுத்தலோ ஆகாது. தேர்தல் ஆணைக்குழுவின் சம்மதத்துடன் பெறப்பட்ட நிழற்படங்களும் வீடியோப் படங்களும் கூட வாக்கெடுப்புக்குப் பின்னரே வெளியிடப்படலாம் அல்லது ஒளிபரப்பப்படலாம்.

22. எவரேனும் வேட்பாளரினால் நடாத்தப்படுகின்றதாக அல்லது அவரை உட்படுத்துகின்றதாக அல்லது எவரேனும் வேட்பாளரை அல்லது கட்சியை அல்லது சுயேச்சைக் குழுவை மேம்படுத்துகின்றதாக அல்லது அதன் நிலையைக் குறைக்கின்றதாகத் தேர்தல் திகதிக்கு முன்னர் ஒளிபரப்பப்பட்ட அல்லது ஒலிபரப்பப்பட்ட அல்லது வெளியிடப்பட்ட ஏதேனும் வர்த்தக விளம்பரம், வினாவிடை நிகழ்ச்சி, களியாட்ட நிகழ்ச்சி, அபிவிருத்திச் செயற்பாடுகள் தொடர்பான ஏதேனும் நிகழ்ச்சி அல்லது அத்தகைய எவையேனும் செயற்பாடுகள் தொடர்பான ஏதேனும் நிகழ்ச்சி, திரைப்படம், தொலைக்காட்சி நாடகம், சங்கீத நிகழ்ச்சி அல்லது அத்தகைய தன்மையினதான வேறேதேனும் நிகழ்ச்சி, வாக்கெடுப்புத் திகதிக்கு நேர் முன்னர் நிலவுகின்ற அமைதி காலப்பகுதியின்போது ஒளிபரப்பப்படுதலாகாது அல்லது ஒலிபரப்பப்படுதலாகாது அல்லது வெளியிடப்படுதலாகாது. தேர்தற் பிரசாரத்தின்போது அரசியற் கட்சிகளினாலும் வேட்பாளர்களினாலும் அறிவிக்கப்பட்ட கொள்கைகளினதும் அவற்றினால் அளிக்கப்பட்ட வாக்குறுதிகளினதும் குற்றநற்றுக்கள் பற்றி வாக்காளர் ஆலோசனை செய்து அவற்றைக் கவனத்திற்கொள்வதனை இயலச் செய்வதற்கு வாக்கெடுப்புத் தேதிக்கு முன்னர் அமைதி காலப் பகுதியொன்று நிலவுவது முக்கியமானதெனக் கருதப்படுகின்றது.

23. தேர்தல் பிரசார நடவடிக்கைகள் தொடர்பில் "அமைதி காலம்" எனப்படுவது தேர்தலை நடாத்துவதற்கு விதித்துரைக்கப்பட்ட தினத்திற்கு 48 மணி நேரத்திற்கு முன்னர் ஆரம்பித்து தேர்தல் முடிவுகள் வெளியிடப்படுதல் வரையான காலமாகும். ஓர் அரசியல் கட்சியை அல்லது வேட்பாளரொருவர் ஊக்கப்படுத்தப்படுவதற்கு அல்லது பாதிப்புக்குள்ளாவதற்கு காரணமாக அமையும் விதத்தில் பிரசார நடவடிக்கை அல்லது பிரசார விளம்பரம் எதுவும் இக்காலப்பகுதியினுள் வெளியிடப்படுதலாகாது.

24. மத நம்பிக்கைகள், மத வழிபாடுகள், பேசப்பட்ட மொழிகள், இனத்துவம், வழக்காறுகள் மற்றும் சாதிகள் என்பன உட்பட, பல்வேறு ஏதுக்களின் மீது இலங்கை மக்களிடையே குரோதத்தையும் சகிப்புத்தன்மையின்மையையும் உருவாக்கக்கூடிய அல்லது தூண்டக்கூடிய பிரசாரத்தை ஒலிபரப்புவதனை அல்லது ஒளிபரப்புவதனை அல்லது வெளியிடுவதனை ஊடக நிறுவனம் ஒவ்வொன்றும் தவிர்த்தல் வேண்டும்.

25. அரசியல் செயற்பாட்டாளர்களிடையேயும் சமூகத்தினுள்ளும் குரோதம் விளைவிக்கும் அரசியலை மேம்படுத்துகின்ற பிரசாரச் செயற்பாடுகளை ஒவ்வோர் ஊடக நிறுவனமும் ஒலிபரப்புவதனை அல்லது ஒளிபரப்புவதனை அல்லது வெளியிடுவதனைத் தவிர்த்தல் வேண்டும்.

26. ஒவ்வோர் ஊடக நிறுவனமும், வெளிப்படுத்துநரின் சம்மதமின்றி வேறோர் அரசியற் கட்சியின் வேறொரு வேட்பாளர் பற்றி எவரேனும் வேட்பாளரினால் அல்லது ஆதரவாளரினால் முன்னர் அளிக்கப்பட்ட ஏதேனும் கூற்றை மீளவெளியிடுவதனை அல்லது மீள ஒளிபரப்புவதனைத் தவிர்த்தல் வேண்டுமென்பதுடன், அத்தகைய ஆளினால் முன்னர் அளிக்கப்பட்ட அத்தகைய கூற்றை மீண்டும் வெளியிடாதிருக்கும்படி அல்லது ஒளிபரப்பாதிருக்கும்படி வெளிப்படுத்துநரினால் செய்யப்படும் கோரிக்கைக்கு மதிப்பளித்தலும் வேண்டும்.

27. அநாமதேய அறிவித்தல்களை அல்லது பிரசாரத்தை மற்றும் போலி ஒழுங்கமைப்புகளின் அல்லது ஆட்களின் பெயர்களின் கீழான அறிவித்தல்களை அல்லது பிரசாரத்தை ஏதேனும் ஊடக நிறுவனம் வெளிப்படுத்துதலாகாது. இது தொடர்பான பொறுப்பு அந்தந்த ஊடக நிறுவனத்தைச் சார்ந்ததாதல் வேண்டும்.

28. ஏதேனும் ஊடக நிறுவனமும், விடயத்துக்கேற்ப, அத்தகைய கூற்றை அளிக்கின்ற அல்லது செய்திகளை வாசிக்கின்ற ஆளும் பிழையான கூற்றுக்களை அல்லது செய்திகளை வெளியிடுதல், ஒலிபரப்புதல் அல்லது ஒளிபரப்புதல் தொடர்பாகச் சமமான முறையில் வகைசொல்ல வேண்டியதாகவும் வகைசொல்ல வேண்டியவராகவும் இருத்தல் வேண்டுமென்பதுடன், இது தொடர்பாக எழக்கூடிய சட்ட வழக்கு நடவடிக்கைக்கு அமைந்ததாகவும், அமைந்தவராதலும் வேண்டும்.

29. தேர்தலின் முடிவு எதுவும் தேர்தல் ஆணைக்குழுவினால் உத்தியோகபூர்வமாக வெளிப்படுத்தப்படும் வரை தேர்தலின் உத்தியோகப்பற்றற்ற முடிவுகளை பகிரங்கப்படுத்துவதைத் தவிர்த்தல் வேண்டும்.

30. ஊடகத்தின் ஒழுக்க நெறிகளைக் கடைப்பிடித்தலும் அவற்றுக்கு அமைந்தொழுகுதலும் ஒவ்வோர் இலத்திரனியல் மற்றும் அச்சு ஊடக நிறுவனத்தினதும் பொறுப்பாதல் வேண்டும்.

31. எல்லா அரசாங்க மற்றும் பகுதியளவிலான அரசாங்க ஊடக நிறுவனங்களும், ஏதேனும் அரசியற் கட்சியை, குழுவை அல்லது வேட்பாளரை ஊக்கப்படுத்துவதற்கு அரச ஆதனத்தையும் நிதிகளையும் பயன்படுத்துவதனை மற்றும் அரசாங்க அரசிறைக்கு நட்டம் விளைவிப்பதனை அத்துடன் ஏதேனும் நிறுவனத்துக்குச் சேதம் விளைவிக்கும் வகையில் செயலாற்றுவதனைத் தவிர்த்தல் வேண்டும். அத்தகைய செயற்பாடு ஏற்படும் பட்சத்தில், அரசியலமைப்பில் குறித்துரைக்கப்பட்ட தண்டங்களுடன் சேர்த்து மேலதிகமாக, பொறுப்பாகவுள்ளோருக்கு எதிராக ஒழுக்காற்று நடவடிக்கை எடுக்கப்படலாம்.

32. எல்லா இலத்திரனியல் மற்றும் அச்சு ஊடகங்களின் உரிமையாளர்களும், இவ்வழிகாட்டுநெறிகளைக் கடைப்பிடித்தல் வேண்டுமென்பதுடன், அத்தகைய வழிகாட்டுநெறிகளை அந்தந்த நிறுவனங்கள் பின்பற்றுவதனை உறுதிப்படுத்துதலும் வேண்டும்.

33. ஏதேனும் தேர்தல் காலப்பகுதியின்போது, சமூக ஊடக இணையத்தளங்களின் உரிமையாளர்களும் அவற்றின் நிருவாகிகளும் கேபிள் தொலைக்காட்சி அலைவரிசைகளின் உரிமையாளர்களும் இவ்வூடாக வழிகாட்டுநெறிகளைப் பின்பற்றியொழுகுதல் அவர்களின் பொறுப்பாதல் வேண்டும்.

34. சுதந்திரமானதும் நியாயமானதுமான தேர்தலை உறுதிப்படுத்துவதற்கு இவ்வழிகாட்டுநெறிகளைப் பின்பற்றுவது அத்தியாவசியமாக உள்ளமையினால், இவ்வழிகாட்டுநெறிகளைக் கடைப்பிடித்தல், ஊடக நிறுவனங்களின் உரிமையாளர்களினதும் சமூக இணையத்தளங்களின் நிருவாகிகளினதும் பயன்படுத்துநர்களினதும் கடமை மட்டுமேயன்றி அவர்களின் பொறுப்புமாகும்.

35. இந்த ஊடக வழிகாட்டுநெறிகளில் "தேர்தல் நடாத்தப்படுகின்ற காலப்பகுதி" எனப்படுவது, விடயத்துக்கேற்ப மக்கள் கருத்துக்கணிப்பு அல்லது தேர்தல்கள் நடாத்தப்படுவதற்கான வெளிப்படுத்துகையொன்று அல்லது விதித்துரைப்பொன்று தினத்திலிருந்து ஆரம்பமாகி அச்சந்தர்ப்பத்தில் குறித்த மக்கள் கருத்துக்கணிப்பு அல்லது தேர்தலின் பெறுபேறுகள் வெளியிடப்படுகின்ற தினம் வரையான காலப்பகுதியேயாகும்.

36. இந்த ஊடக வழிகாட்டுநெறிகளுக்கு இணங்கியவாறான அல்லது இணங்காதவாறான விடயங்கள் தொடர்பான அச்சு, வானொலி, தொலைக்காட்சி அல்லது இணையத்தள சமூக வலைத்தளங்கள் என்பவற்றினூடாக ஊடகம் எதனிலும் மேற்கொள்ளப்படுகின்ற வெளியீடுகள், அறிக்கைகள் அல்லது பிரச்சாரங்கள் மூலம் இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் அரசியலமைப்பு அல்லது நாட்டில் செயல்வலுவிலுள்ள தேர்தல் சட்டம் அல்லது வேறெந்தச் சட்டமும் மீறப்படுமாயின், அவ்வாறான வெளியீடுகள், அறிக்கைகள் அல்லது பிரச்சாரங்களை செய்வதை அல்லது ஒலிபரப்பு, ஒளிபரப்பு செய்வதைத் தவிர்த்துக் கொள்ளல் வேண்டும்.

06-143

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.